20th October 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த ஆண்டிலே புதிதாக ஐ.ஏ.எஸ். பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக எனக்கு நினைவில் வரவில்லை.

திருச்சியில் நிலக்கரி எடுத்தல்

*33. **கேள்வி—திரு. து. ப. அழகமுத்து :**
திரு. பி. முருகையன் :
திரு. ஆ. கு. சுப்பையா :
} கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூரை அடுத்த குளத்தூரில் கிணறு வெட்டும்போது நிலக்கரி கிடைத்த செய்தி சர்க்காரின் கவனத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டதா ? விவரமென்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) இப் பகுதியில் மாநிலப் புவியியல் பிரிவினர் பரிசீலனை நடத்தினர். இப் பகுதியில் நிலக்கரி கிடைப்பதற்கான அறிகுறி சிறிதுமில்லை. மாதிரிப் பாளங்களில் நிலக்கரி இல்லை. இதில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறு தாவர கீற்றுகள் மட்டுமே காணப்பட்டன. மேற்படி கொளத்தூர் பகுதியில் நிலக்கரிக்காகத் துளை போட்டுப் பார்த்ததில் திருப்திகரமான பலன் கிடைக்காததால், மேற்கொண்டு பரிசீலனை செய்யும் வேலை கைவிடப்பட்டது.

(*a*) Yes Sir.

(*b*) The area was investigated by the State Geological Branch. There was little indication of any coal occurrence in the area. The core samples were also devoid of coal except for a few stray thin streaks of vegetable matter. In view of the discouraging results achieved in the drilling operations, further investigation for coal in Kolathur area was given up.

தஞ்சை மாவட்டத்தில் பாய் முடைவோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

*34 **கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பாய்முடைவோர் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை இயங்கி வருகின்றன ?

(இ) அவற்றுள் பணம் கையாடல் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள சங்கங்கள் எத்தனை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 9 (nine).

(*b*) None Sir.